திரு. ஜே. ஜேம்ஸ்: இந்த அரசின் கொள்கை இருமொழிக் கொள்கை என்பது இந்தச் சட்டப் பேரவையில் தீர்மானம் மூலமாக மத்திய அரசுக்கு அறிவிக்கப்பட்டபோதிலும், அதனை மத்திய அரசு இதுவரையில் ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆகவே, மத்திய அரசு இந்த அரசின் இருமொழிக் கொள்கையினை ஏற்றுக் கொள்வதற்கு இந்த அரசு மேற்கொண்டு என்ன நடவடிக்கையினை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நம்முடைய மாநிலத்தில் அனைவரும் அதை ஏற்றுக்கொண்டாலே போதும் என்பதுதான் இந்த அரசினுடைய நோக்கம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நம்முடைய அரசியல் சட்டத்தின் படியும், நேரு அவர்கள் கொடுத்த வாக்குறுதியின்படியும் ஆங்கிலத்திலும் எழுதலாம் இந்தியிலும் எழுதலாம் என்று இருக்கிறது. இந்தச் சுற்றறிக்கையின் மூலமாக ஆங்கிலத்தில் எழுதுவது தடுக்கப் பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முதலில் அது தடுக்கப் படக்கூடிய சூழ்நிலை இருந்த காரணத்தால் கடிதம் எழுதியனுப்பப் பட்டது. பிறகு அங்கே பாராளுமன்றத்தில் மாத்திரம் ஏதோ உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டிருப்பதாக நமக்குத் தெரிய வருகிறது. ஆனால், நேரடியான பதில் எதுவும் வரவில்லை.

அரசு கல்லூரி பேராசிரியர்கள்

* 120 வின—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சர்க்கார் கல்லூரிகளில் பணிபுரியும் பிஎச்.டி. பட்டம் பெற்றவர்களுக்கு பதவி உயர்வு தரும்போது முன்னுரிமை வழங்கப் படுகிறதா?

(இ) ஆம் எனில், தற்போது எத்தனை பிஎச்.டி. பட்டதாரிகள் அரசு கல்லூரிகளில் பணியாற்றுகிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை. தமிழ்நாடு கல்விப்பணி தனி விதிகளில் பிஎச்.டி. பட்டம் பெற்றவர் களுக்கு முன் உரிமை வழங்குவதற்கு தனிச் சலுகை ஒன்றும் நிர்ணயிக்கப்படவில்லை.

1972 ஆகஸ்ட் 17]

(இ) அரசு கல்லூரிகளில் தற்போது பிஎச்.டி. பட்டம் பெற்ற 14 பேராசிரியர்களும் 10 உதவிப் பேராசிரியர்களும் பணியாற்றி வருகிறார்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தமிழைப் பாடமொழியாக ஏற்று பிஎச்.டி. பட்டம் பெற்றவர்கள் எத்தனை பேர் என்று அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றி குறிப்பு இல்லை. ஆனால் தமிழில் பிஎச்.டி. பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களை தமிழில் படித்துப் பட்டம் பெற்றவர்களாகத்தான் நாம் கொள்ளவேண்டும். அவர்களுடைய எண்ணிக்கை குறித்துத் தனிக் கேள்வி போட்டால் விவரம் தரலாம்.

சென்னை நகராட்சி

* 121 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகர எல்லையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆம்.

திரு. என். கிட்டப்பா: சென்னையைச் சுற்றியுள்ள சில புறநகர்ப் பகுதிகளையும் சென்னை நகரத்தோடு இணைத்து ஒரு பெருநகர் திட்டமாக உருவாக்கி மேலும் பல நல்ல வசதிகளைச் செய்து கொடுக்க அரசு ஏதாவது திட்டம் வகுத்துள்ளதா? ஆமெனில் அதற்கான விவரங்களை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவர், தென் சென்னை புறநகர்ப் பகுதியைச் சேர்ந்த சுமார் 134 ஏக்கர் நிலத்தை சென்னை மாநகர எல்லையுடன் சேர்க்கக் கோரி ஒரு திட்டத்தை அனுப்பியுள்ளார். இதனால் புறநகர்ப் பகுதியில் உள்ள சாலைகள், குடிநீர், வடிகால் திட்டம் முதலியன சென்னை மாநகராட்சியின் பொறுப்பில் விடப்பட ஏதுவாகும். பெசன்ட் நகர், சாஸ்திரி நகர், இந்திரா நகர் இவை மூன்றும் தென் சென்னையைச் சார்ந்த பகுதிகள் ஆகும். இவைகள் ஊரூர், கலிருன்றம், திருவான்மியூர் பகுதியில் உள்ளன. சமீபத்தில்